செய்தி வெளியீடு எண்: 356 நாள்: 21.06.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (21.6.2019) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 425 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆரணி முதல் விழுப்புரம் வரையிலான ஆற்காடு – விழுப்புரம் மாநில நெடுஞ்சாலையினை காணொலிக் காட்சி (Video conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் 209 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 14 பாலங்கள் மற்றும் 3 இரயில்வே மேம்பாலங்களையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தரமான சாலைகள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 425 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆரணி முதல் விழுப்புரம் வரையிலான ஆற்காடு – விழுப்புரம் மாநில நெடுஞ்சாலையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இம்மேம்படுத்தப்பட்ட நெடுஞ்சாலை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வருவதன் மூலம், சாலை உபயோகிப்பவர்களின் பாதுகாப்பான பயணம் உறுதிசெய்யப்படுவதுடன், பயண நேரமும் வெகுவாக குறையும். பொதுமக்கள் பயன்பாட்டிற்காக, இச்சாலை வழித்தடத்தில் 35 பேருந்து நிறுத்தங்கள் கட்டப்பட்டுள்ளன. அதில் 15 பேருந்து நிறுத்தங்களில் சூரிய சக்தியில் இயங்கும் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், இந்நெடுஞ்சாலையில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 36,000-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. ஆரணி முதல் விழுப்புரம் வரையிலான இச்சாலை வழித்தடத்தில் உள்ள ஆரணி, விண்ணமங்கலம், தெள்ளூர், இந்திராவனம், கங்கை சூடாமணி, சேத்பட், வளத்தி, அன்னமங்கலம், ஜெயங்கொண்டான், செல்லபிராட்டி, அப்பம்பட்டு, கவரை, பாலப்பட்டு, ஒட்டம்பட்டு, மாவந்தல், பொன்பத்தி, சிட்டாம்பூண்டி, செஞ்சி புதூர், நகர், முட்டத்தூர், மண்டகாபட்டு, அரசலாபுரம், நேமூர்,

நரசிங்கனூர், கஞ்சனூர், வேம்பி, பூண்டி, தும்பூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் பயனடைவர்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சென்னை – திருச்சி – திண்டுக்கல் சாலையில் திருச்சி – திருவானைக்காவல் அருகில் 125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம்; விருதுநகர் மாவட்டம், விருதுநகர் மற்றும் துலுக்கப்பட்டி இரயில்வே நிலையத்தின் (விருதுநகர் நகரம்) வழியில் துணைச்சாலையில் இரயில்வே இருப்புப் பாதையில் கடவு எண். 403–க்கு பதிலாக விருதுநகரில் 26 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் யார்டில் அமைந்துள்ள இரயில்வே கடவு எண் 309–க்கு பதிலாக திண்டுக்கல் நகர் இரயில் நிலைய பணிமனையில் 26 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம்;

திருவண்ணாமலை மாவட்டம், மாரியநல்லூரில் கால்வாயின் குறுக்கே 1 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆற்றுப்பாலம், திருநெல்வேலி மாவட்டம், ஆலடிப்பட்டியில் ஓடையின் குறுக்கே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆற்றுப்பாலம்; பெரம்பலூர் மாவட்டம், பனங்கூரில் மருதையாற்றின் குறுக்கே 2 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆற்றுப்பாலம்; தருமபுரி மாவட்டம், அய்யம்பட்டியில் காட்டாற்றின் குறுக்கே 2 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆற்றுப்பாலம் மற்றும் கொக்கராபட்டியில் பெண்ணையாற்றின் குறுக்கே 1 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆற்றுப்பாலம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், காட்டூர் – கொப்பாவளி மற்றும் சர்க்கரை ஆலை விரிவு சாலையில் காட்டூரில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுபாலம் மற்றும் கள்ளக்குடி – தாப்பாய் சாலையில் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; கிருஷ்ணகிரி மாவட்டம், விசிசி சாலையிலிருந்து செல்லும் பாத்தகோட்டா சாலையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே 2 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர் மட்டப்பாலம், அஞ்செட்டியில் தொட்டலாற்றின் குறுக்கே 4 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆற்றுப்பாலம், தக்கட்டியில் ஓடையின் குறுக்கே 1 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆற்றுப்பாலம் மற்றும் பேளூரில் காட்டாற்றின் குறுக்கே 1 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆற்றுப்பாலம்;

தஞ்சாவூர் மாவட்டம், ஊரணிபுரத்தில் நரியாற்றின் குறுக்கே 1 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆற்றுப்பாலம்; விழுப்புரம் மாவட்டம், செஞ்சி–வடபாலை சாலையில் 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிங்கவரத்தில்

கட்டப்பட்டுள்ள சிறுபாலம்; வேலூர் மாவட்டம், சதுரங்கப்பட்டினம் – செங்கல்பட்டு – காஞ்சிபுரம் – அரக்கோணம் – திருத்தணி சாலை, அரிகில்பாடியில் பழைய இரும்பு பாலத்திற்கு மாற்றாக 6 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம், 634 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 இரயில்வே மேம்பாலங்கள், 14 பாலங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட சாலை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயலாக்கப்படும் சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டத்தினை செயல்படுத்திடவும், கண்காணித்திடவும், கள ஆய்வுகளை மேற்கொள்ளவும், செயலாக்க அலகிலுள்ள அலுவலர்களுக்கு இரண்டாம் கட்டமாக 2 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 32 ஜீப்புகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 5 அலுவலர்களுக்கு ஜீப்புகளுக்கான சாவிகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. எஸ். கே. பிரபாகர், இ.ஆ.ப., சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்ட இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) டாக்டர் அருண் தம்புராஜ், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) திருமதி என். சாந்தி, தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) திருமதி இரா. கீதா (கூடுதல் பொறுப்பு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**